## சுருக்கம்

அறிவிப்புகள் – 2021 – 2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் – 275 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் "செம்மொழி நூலகம்" என்ற பெயரில் நூலகம் அமைக்க நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த்துறை

அரசாணை (நிலை) எண்.72 நாள் 24.11.2021

பிலவ, கார்த்திகை 8

திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை:

1) பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண்.பி2/ 5639/2021, நாள் 17.09.2021 மற்றும் 18.10.2021.
2) சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண்.பி4/ 3021/2021, நாள் 16.09.2021 மற்றும் 18.10.2021.

******

ஆணை:

2021-2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நல அமைச்சர் அவர்கள் ஆகியோரால், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயின்று வரும் மாணவ, மாணவியரின் கல்வி அறிவு மற்றும் பொது அறிவினை வளர்க்கவும், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சிறப்பான முறையில் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டும் 273 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில், தலா ஒரு நூலகம் ("செம்மொழி நூலகம்" என்ற பெயரில்) 2 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும் என அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

2. இவ்வறிவிப்புகளை செயல்படுத்தும் பொருட்டு மேலே முதலாவது மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் ஆகியோரின் கடிதங்களில், 273 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ,

மாணவியர் கல்வி மற்றும் அறிவு நலனை கருத்திற் கொண்டு ஒவ்வொரு விடுதிக்கும் "செம்மொழி நூலகம்" என்ற பெயரில் தலா ஒரு நூலகம் அமைக்கலாம் எனவும், இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு ஒரு குழுவினை அமைக்கலாம் எனவும் தெரிவித்துள்ளனர். அக்குழுவின் மூலம் நூலகத்தில் தலைசிறந்த மற்றும் தரமான புத்தகங்களை தேர்வு செய்யவும் மற்றும் புத்தக அலமாரி, நீளவாக்கு மேஜைகள், நாற்காலிகள் ஆகியவற்றை தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி கொள்முதல் செய்து விடுதிகளுக்கு வழங்கவும் மேலும் இது சம்மந்தமாக மாநில அளவில் கீழ்க்கண்ட குழு அமைக்கவும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் அனுமதி கோரியுள்ளார்.

1. பிற்படுத்தப்பட்டோர்/மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர்/ஆணையர்.
2. இயக்குநர், பொதுநூலகத்துறை இயக்ககம் அல்லது அவரால் நியமிக்கப்படும் பிரதிநிதி.
3. தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர் அல்லது அவரால் நியமிக்கப்படும் பிரதிநிதி.
4. இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை.
5. சென்னை பல்கலைக்கழக பேராசிரியர்/அலுவலர்.
6. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர்/ஆணையர்களின் நேர்முக உதவியாளர்கள்.
7. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களின் கணக்கு அலுவலர்கள்.
8. கள்ளர் சீரமைப்பு பள்ளி தலைமையாசிரியர் ஒருவர்.

3. 273 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளுள், பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, சோலைச்சேரி, தென்காசி மாவட்டம் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல தொழில்நுட்பக் கல்லூரி மாணவியர் விடுதி, கடலூர் மாவட்டம் ஆகிய இரண்டு விடுதிகள் தவிர, ஏனைய விடுதிகளில் நூலகம் அமைப்பதற்கான போதிய இடவசதி உள்ளது எனவும், மேலும் தரம் உயர்த்தப்படவுள்ள 2 விடுதிகளிலும் இடவசதி உள்ளதால், அவற்றிற்கும் சேர்த்து நூலகம் அமைக்கவும், இடவசதி இல்லாத விடுதிகளில் நீளவாக்கு மேஜைகள் தவிர பிற தளவாடப் பொருட்களை கொள்முதல் செய்து வழங்க நிதி ஒப்பளிப்பும் வழங்கக் கோரியுள்ளனர்.

4. இக்கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு,

i. இத்துறையின் கீழ் இயங்கும் 275 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலனுக்கென "செம்மொழி நூலகம்" என்ற பெயரில் தலா ஒரு நூலகம் அமைக்கவும்,

ii. நூலகம் அமையவுள்ள அறையின் நுழைவாயிலில் "செம்மொழி நூலகம்" என்ற பெயர் பலகை நிறுவவும்,

iii. 275 கல்லூரி விடுதிகளில் தலா ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) செலவில் புத்தகங்களை வாங்கி வழங்கவும், புத்தக அலமாரி (இரும்பு), நீளவாக்கு மேஜைகள் (இரும்பு), நாற்காலிகள் (பிளாஸ்டிக் – பயன்பாட்டில் இல்லாத நேரத்தில் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைக்க) உள்ளிட்ட தளவாடப்பொருட்களை தலா ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) செலவில் நிறுவவும், இடவசதி இல்லாத பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, சோலைச்சேரி, தென்காசி மாவட்டம் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல தொழில்நுட்பக் கல்லூரி மாணவியர் விடுதி, கடலூர் மாவட்டம் ஆகிய இரு விடுதிகளில் மேஜைகள் தவிர இதர தளவாடப் பொருட்களை வாங்கி வழங்கவும்,

iv. நூலகத்தில் தலைசிறந்த மற்றும் தரமான புத்தகங்களை தேர்வு செய்வதற்கு மேலே பத்தி 2–ல் உள்ளவாறு மாநில அளவிலான குழு அமைக்கவும்,

v. குழு மூலம் தலைசிறந்த மற்றும் தகுதியான புத்தகங்கள் மற்றும் புத்தக அலமாரி, நீளவாக்கு மேஜைகள், நாற்காலிகள் ஆகியவற்றை தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி கொள்முதல் செய்து விடுதிகளுக்கு வழங்கவும்,

vi. நிருவாக நலன் கருதி இக்குழுவினை மாற்றி அமைக்க பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்கு அனுமதி வழங்கியும்,

vii. இத்திட்டத்தினை செயல்படுத்த தேவைப்படும் மொத்த செலவினமான ரூ.2,74,52,000/–க்கு (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் மட்டும்) நிருவாக ஒப்புதல் வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.52275/ நிதி (பி, மிபி(ம)சிந)/2021, நாள் 23.11.2021–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை– 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை– 5.
சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை – 5.
இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை.

மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 1), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 2), சென்னை–18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து கருவூல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடுவாழ் தமிழர் நலன்) அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை– 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
நிதி (பி, மிபி (ம) சிந)/வ.செ.பொதுI/வ.செ.பொதுII/வ.வ.I)த்துறை,
சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல (பிந3)த்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

வா.சுதா 24/11/2021
பிரிவு அலுவலர்
24/11/2021